8th August 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) &(இ) குளச்சல், பத்மநாபபுரம் நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் வசதியை அதிகப்படுத்துவதன் பொருட்டு, பரிசீலனை செய்யப்படவேண்டிய திட்டங்களில் மாம்பழத்துறை அணை கட்டும் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தைப் புலனாய்வு செய்யும்பணி நிறைவேறி வருகின்றது. அது முடிவடைந்து, மேற்படி அணை கட்டுவதற்கு ஆகும் மதிப்பீட்டுச் செலவை அறிந்த பிறகுதான் தலைமைப் பொறியாளர் அவசியமான செயற்குறிப்புகளை அரசாங்கத்துக்கு அனுப்பி வைப்பார்.

* 235 *Q.*—SRI V. SANKARAN: Will the hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government propose to implement any scheme for providing protected water supply to the panchayats of Chittode, Masianur, Perunthurai, Chennimalai and Ramalingam T.B. Santorium in Coimbatore district from the river Cauvery; and

(b) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) பெருந்துறைக்கும் சித்தோடு, நச்சியனூர் ஆகிய பஞ்சாயத்துக்களுடன் வழியிலுள்ள பிற பஞ்சாயத்துக்கள், மற்றும் பெருந்துறை இராமலிங்கம் காச நோய் நலம் பேண் மருத்துவமனை (Tuberculosis Sanatorium) ஆகியவற்றிலும் நீர் வழங்கும் திட்டத்திற்காக தொடக்கச் செயற் குறிப்புக்கள் வரப்பெற்று, அவை பரிசீலனையில் உள்ளன.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: தலைவர் அவர்களே, சித்தோடு, மசியனூர் முதலிய பிராந்தியங்களுக்கு காவேரி ஆற்றிலிருந்து நீர் வழங்கும்போது, பக்கத்திலுள்ள பிராமண பெரிய அக்கிரஹாரம், வீரப்பன் சத்திரம் என்ற இடங்களையும் இணைக்கும் உத்தேசம் உண்டா? 9-30 a.m.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், இல்லை.

டவுன் பிளானிங் திட்டம்

* 236 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரத்தில் டவுன் பிளானிங் திட்டத்தின் கீழ் ஏதேனும் நிலம் எடுக்கப்பட்டிருக்கிறதா?

(இ) ஆமெனில், யார் யார் நிலம் எவ்வளவு எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) இந்த கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. தங்கவேலு: தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரத்தில் டவுன் பிளானிங் திட்டத்தின்கீழ் அயன் நஞ்சை நிலங்களில் அனேக ஏக்கர்களை சர்க்கார் எடுத்திருப்பதாக கெஸட்டில் நோட்டிபிகேஷனும் வந்திருக்கிறது. ஆனால், அப்படியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இதற்கு என்ன காரணம்?